1972 டிசம்பர் 4]

சென்னை-நாகப்பட்டினம் விரைவுப் பேருந்து

*37. திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-நாகப்பட்டினம் செல்லும் எக்ஸ்பிரஸ் பஸ் செம்பனார்கோவிலில் நின்று செல்ல ஒரு Stop ஏற்படுத்த வேண்டும் என்று பொதுமக்களிடமிருந்தும், ஊராட்சி மன்றத்திலிருந்தும் கோரிக்கைகள் வந்துள்ளனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. நா. வீராசாமி : ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பதைப் போல் நாட்டில் யார் கலவரம் செய்தாலும், எந்தப் போராட்டம் நடந்தாலும் பஸ்களை நொறுக்குவது என்ற முறையில் சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஊருக்கு இளைத்தது, பிள்ளையார் கோயிலோ என்னவோ ? இன்றையதினம் எல்லோருக்கும் இளைத்ததாக அரசாங்க பஸ்கள்தான் இருக்கின்றன. போராட்டம் எப்படி நடத்துவது என்று தெரியாததன் கோளாறே தவிர, வேறு அல்ல.

திரு. எஸ். கணேசன் : எக்ஸ்பிரஸ் பஸ் செம்பனார் கோயிலில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : செம்பனார் கோயிலைப் பொறுத்தவரை வேண்டுகோளுக்கிணங்க பஸ்ஸை நிறுத்துமிடமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது 14—8—1972 முதல் அமலில் இருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அண்மையில் நடந்த வன்முறை, வெறியாட்டச் செயல்களினால் அரசு பஸ்களுக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது ? சேதத்தின் கணக்கு என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முழு விவரம் இல்லை என்றாலும் வருமான வகையில் மட்டும் கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

திரு. தொ. ப. சீனிவாசன் : போளூரில் இருந்து சென்னைக்கு வர சாதாரண வண்டிகள் சுற்றி வருகின்றன. ஏற்கனவே, ஆரணி வழியாக துரித வண்டி விடும் திட்டம் இருந்தது. அது அமலபடுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : குறிப்பாக, சென்னையினுடைய சுற்றுப்புற நகர்களில் இருந்து விரைவு வண்டிகள் விட்டால் அவ்வளவு நல்ல வருவாயைத் தேடித் தருவதில்லை. ஆகவே, சாதாரண வண்டிகள் விடுவது தான் பொறுத்தமானது.

திரு. கு. காமாட்சி : சமூக விரோதிகள் பேருந்துகளைக் கொளுத்தவில்லை, சேதப்படுத்தவில்லை, காவல் துறையைச் சார்ந்தவர்கள்தான் கொளுத்தினார்கள் என்று யாரோ திருநெல்வேலியைச் சேர்ந்த வழக்கறிஞர் சொன்னதாக பொறுப்புள்ள கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த திரு. கல்யாணசுந்தரம், எம்.பி. அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. அது அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதைப்போல் பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. கொளுத்தியது யார் என்பது ஒருபுறம் இருக்க கொளுத்தப் பட்டதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. அது சம்பந்தமாகப் போலீஸ் புலன் விசாரணை இருந்து வருகிறது.

திரு. அ. தேவேந்திரன் : மாயூரத்திலிருந்து திருவாரூர் போகிற விரைவு வண்டிகள் நன்னிலத்திற்குப் போகாமல் ஆண்டிப்பந்தல் வழியாகப் போகின்றன. அவை நன்னிலம் வழியாகப் போக வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? கோரிக்கையை ஏற்று ஆவன செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதி மக்களுக்குக் காட்டுகின்ற அக்கறையை நான் பாராட்டுகிறேன். தனிக் கேள்வி போடவும்.

திரு. கா. வேழவேந்தன் : நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது ஒருசில வாரங்களில் மட்டும் 60 லட்சம் ரூபாய் அளவுக்கு சேதமேற் பட்டதாகச் சொன்னார்கள். அந்த வன்முறையாளர்கள் மீது முறையாக வழக்குகள் தொடரப்பட்டு விசாரணை நடந்து நிரூபிக்கப்பட்டு குற்றவாளிகள் யார் யார் என்று தெரிந்த பிறகு அவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் தொடர்ந்து அந்த நஷ்டத்தை ஈடுகட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சேதத்தின் அளவு எவ்வளவு என்று நான் குறிப்பிடவில்லை. ஆனால் அண்மைக் காலத்தில் நடைபெற்று வருகின்ற வன்முறைச் சம்பவங்கள் காரணமாக நாம் விரைவு பேருந்துகளை விட்டாலும் பயணிகள் ஏறப் பயப்படுகின்ற நிலை இருந்து வருகிறது. அந்த வகையில் பார்க்கிறபோது கலவரங்கள் காரணமாக, வெறியாட்டம் காரணமாக

1972 டிசம்பர் 4]

பொதுவாக அரசுப் பேருந்துகளில் நல்ல வருவாய் இல்லாத காரணத்தால் 60 லட்சம் ரூபாய் வருமானம் குறைந்திருக்கிறது. சேதத்தின் அளவு பற்றி விவரம் சேகரித்து பின்னால் தரப்படும்.

திரு. இராம. அரங்கண்ணல்: ஆந்திர மாநிலத்தில் நடைபெற்ற கிளர்ச்சி யின் போது அரசுக்குச் சொந்தமான ரயில்வேக்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. ஸ்டேஷன்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. அதுபற்றி பார்லிமெண்டில் கேள்வி கேட்டபோது ரயில்வே அமைச்சர் பாய் அவர்கள் இப்படிப்பட்ட கலவரங்கள் நடைபெறுகின்ற பகுதிகளில் ரயில்கள் ஓடாது என்று குறிப்பிட்டார். அது போல் நம்முடைய அரசும் கலவரம் நடைபெறும் பகுதிகளில் பஸ்களை ஓட்டாமல் நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கலவரம் நடைபெறுகின்ற நேரங்களில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது போல் பயணிகள் பேருந்துகளில் செல்ல அஞ்சுகிறார்கள் என்றாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காவல் துறையினர் எடுத்துக் கொண்ட குறிப்பான, தீவிரமான நடவடிக்கைகள் காரணமாக அந்தப் போக்குவரத்துகள் எல்லாம் ஒழுங்காகச் செல்லுகின்றன. ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அந்தப் பிரச்சினைக்கு இடம் இல்லை.

திரு. கோ. செபமாலை: திருச்சியில் இருந்து சென்னைக்கு வரும் துரித வண்டிகளும், சென்னையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் வண்டிகளும் வேப்பூரில் நிற்காமல் செல்லுகின்றன. அரசு ஆணையிட்டும் நிற்கவில்லை. அங்கு அந்த பஸ்கள் நிற்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அதுபற்றிய தகவலை இப்போதுதான் உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. பி. கந்தசாமி: சமீபத்தில் நடந்த வன்முறைச் செயல்களின் காரணமாக பொது மக்களின் சொத்துக்கள் லட்சக் கணக்கில் சேதம் அடைந்திருப்பதற்குக் காரணம் அரசினுடைய தாராள மனப்பான்மைதான், வன்முறையாளர்கள் சதிச் செயல்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த நிகழ்ச்சிகள் தடுக்கப்பட்டிருக்குமென்று கூறப்படுகிறது. ஆகவே, அரசு தீவிர நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : அண்மையில் நமது டில்லி பாராளுமன்றத்தில் ரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கக்கூடியவர்களுக்கு மரண தண்டனை கூட விதிக்கலாம் என்ற வகையில் ஆலோசித்ததாகச் சொல்லப்படுகிறது. அதைப் போல் நம்முடைய அரசு இப்படி வன்முறையில் ஈடுபட்டு அரசின் சொத்துக்களுக்குச் சேதமேற்படுத்துகிறவர்கள் மீது இப்போதைவிட இன்னும் கடுமையான முறையில் நடவடிக்கை எடுத்து தண்டனை அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கொலை செய்பவர்களுக்கே மரண தண்டனை கொடுக்கலாமா வேண்டாமா என்ற ஆராய்ச்சி அகில உலகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற காரியங்களுக்கு சட்டத்திற்கு உட்பட்டு எவ்வளவு கடுமையான தண்டனைகளை அளிக்க வேண்டுமோ அந்தத் தண்டனைகளை நீதிமன்றத்தில் வழங்குவார்கள். வழக்குகள் தொடர எல்லோர் மீதும், யாராக இருந்தாலும், தயவு தாட்சண்யமின்றி கட்சி பாரபட்சமில்லாமல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ரா. ரா. முனுசாமி : சென்னைக்கு வரும் துரித வண்டி திருவண்ணாமலையிலிருந்து புறப்படுவதன் காரணமாக செஞ்சிக்கு வரும்போது அங்கு ஏறுபவர்களுக்கு டிக்கட் இல்லாத நிலை ஏற்படுகிறது. செஞ்சிக்கு வருகிறபோது இடமில்லை என்ற நிலை ஏற்படுகிறது. எனவே, ஏற்கனவே இருந்தது போல் மீண்டும் செஞ்சியிலிருந்து துரித வண்டி சென்னைக்கு விட அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருவண்ணாமலையில் பணிமனை வசதி இருக்கிறது. செஞ்சியில் இருந்து போதுமான அளவுக்குப் பயணிகள் ஏறுவார்களானால், அந்த நிலை ஏற்பட்டால் கூடுதலான பஸ்களை விடுவது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. கே. ஏ. வகாப் : அண்மையில் நடந்த வன்முறைகளின்போது பஸ் தொழிலாளர்கள் மிகவும் ஒழுங்காகவும், உழைக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடும் வன்முறைகளை எதிர்க்கின்ற முறையில் அல்லது வன்முறைகளை எல்லாம் தாங்கிக் கொள்ளுகின்ற முறையில் நல்ல வகையில் பணியாற்றியதற்காக அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசு பாராட்டுத் தெரிவித்துள்ளதா? அப்படி நல்ல முறையில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு பரிசு, பாராட்டுகள் வழங்குவதற்கு அரசுக்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போல் இந்தக் கலவரமான சூழ்நிலைகளுக்கிடையேகூட பொது மக்கள் நன்மையைக் கருதி நல்ல முறையில் பேருந்துகளைப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் இயக்கினார்கள் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய

உண்மையாகும். எதிர்க் கட்சியினர் அதைப் பாராட்டும்போது அரசாங்கம் வேறு தனித்துப் பாராட்ட வேண்டுமென்று சொன்னாலும் பொதுமக்களும் இன்றைக்கு போக்குவரத்துத் தொழிலாளர்களை இந்த வகையில் பாராட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : பேருந்துகள் எல்லாம் இப்படிப்பட்ட போராட்டங்களில் ஏராளமாக அழிக்கப்படுகின்றன, கண்ணாடிகள் எல்லாம் நொறுக்கப்படுகின்றன, பேருந்துகள் கொளுத்தப்படுகின்றன, இவை நம் அரசுக்கு ஏற்படுகிற ஒரு பெரிய இழப்பு. ஆகவே இத்தகைய சமூக விரோத சக்திகளிடமிருந்து அதற்குண்டான மதிப்பீட்டை நஷ்டயீடாகப் பெறுகிற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? அதற்கான சட்டத்தைக் கொண்டு வதற்கு அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நம்முடைய அரசு பேருந்து வண்டிகளை நாசப்படுத்த முனைகிறவர்கள் சமூக விரோத சக்திகள் மாத்திரம் என்று சொல்லிவிட முடியாது. தேசியமயமாக்கும் கொள்கைக்கு விரோதமாக இருப்பவர்களும் அதில் நுழைந்திருப்பதாகத் தோன்றுகிறது.

Madras-Hosur Express bus service

* 38. *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to introduce night bus service under the auspices of Transport Department from Madras to Hosur; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : On behalf of Hosur and Denkanikota taluks, I express my gratitude to the Hon. Minister for Transport for having conceded our request and introduced express buses from Bangalore to Madras via Hosur. There is a huge traffic via Hosur and it often becomes a bottleneck. In spite of so many buses it becomes inadequate for passengers. There is great demand for buses from Hosur to Tirupathi and Kolar gold fields. May I know from the Hon. Minister whether he would consider introducing such buses in those routes from Hosur?